G. D. NAIDU,
U. M. S., COIMBATO[RE]
7 Pol 9—49

திராவிடப் பெரும்போர்



திருவாரூர் கே. தங்கராஜு தீட்டியது

சீர்திருத்த நாடக சபா
(வெளியீடு)
கோயமுத்தூர்.

படம் பிடிப்பவர்களுக்கு ஒரு நற்செய்தி.

தென்னாட்டிலேயே மிகவும்

உயர்தரமான முறையில்

கட்டப்பட்டதும்

அதிக வசதிகள் உள்ளதுமான

ரத்தின ஸ்டுடியோஸ்

சேலம்.

தற்சமயம் பல படங்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

G. D. NAIDU,
U. M. S., COIMBATORE
S629
7 Pol 9—49

திராவிடப் பெரும்போர்

திருவாரூர்
கே. தங்கராஜு
தீட்டியது.

★

சீர்திருத்த நாடக சபா
(வெளியீடு)
கோவை.

விலை] [5 அணா

பங்கஜா மில்ஸ்,

லிமிடெட்.

(1932-A ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் கோயமுத்தூர்

கோயமுத்தூரில், பேர்பெற்ற மில்களின் வரிசையில்சேர்ந்த இம்மில் தக்க அநுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

: ஸ்பின்னிங் :

80-நெ. வரை ரிங்கு நூல்

மற்றும் இதே இனத்தில்

டப்ளிங்கும் தயாரிக்கப்படுகிறது.

வருடந்தோறும் பங்குதாரர்கட்கு நல்ல வட்டி தரப்பட்டு வந்துள்ளது.

இந்திய முதல் இந்திய தொழிலாளர்

இந்திய நிர்வாகம்

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசீய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆதலால்

இந்த மில் நூலை அனைவரும் ஆதரியுங்கள்

Managing Agents and Secretaries:-

C. S. RATNASABHAPATHI MUDALIAR & SONS,

COIMBATORE.

முன்னுரை.

C. P. சிற்றரசு
"தீப்பொறி"

வேலூர்
19—10—48.

திருவாரூர் தோழர் கே. தங்கராசு அவர்கள் இந்த "திராவிடப் பெரும்போர்" என்ற நூலை மிகத் திறம்பட எழுதியிருக்கின்றார்.

போர் என்ற சொல் புதிதல்ல திராவிட இனத்திற்கு என்பதை தொடக்க முதல் முடிக்கும்வரை நமது சமுதாயத்தின் போர் குணச்சிறப்புகளை ஒன்று விடாமல், படிப்போர் முதல் கேழ்ப்போர்வரை அனைவருடைய தளர்ந்த நாடி நரம்புகள் முறுக்கேறவும் குன்றிய மன உணர்ச்சிக்கோர் புதிய உயிர் சக்தியையும் தருகிறது. சிறந்த எழுத்தாளர் மாத்திரமல்ல, உணர்ச்சிப் பொங்கும் சொற்குவியல்களை இளைஞர் உள்ளத்திற்கும், சிறந்த கருத்துக்களை அனுபவம் பெற்ற அறிஞர்களுக்கும், மேடைப்பேச்சுக்குகந்தவாறு விருவிருப்பான நடையையும் வீசுகின்றார் தமது தமது அறிவுக்களஞ்சியத்திலிருந்து, நான் படித்து மகிழ்ந்தவாறு அனைவரும் படிக்கவேண்டுமென்பது எனது பேரவா.

C. P. சிற்றரசு.

கோவை சாரதா ஹாலில்

25—10—48 திங்கள் முதல்

நடிகவேள் M. R. ராதா நடிக்கும்

"தூக்குமேடை"

பிரதி தினம் இரவு 9-30க்கு ஞாயிறு மாலே 6-30க்கு

டிக்கட் விபரம்: ரூ. 3—0—0, 2—4—0, 1—8—0

0—13—0, 0—6—6 (வரியுள்பட)

சீர்திருத்த நாடக சபா.

எமது அடுத்த வெளியீடுகள் !

திருவாரூர் கே. தங்கராஜு தீட்டிய

1. கலையும் - நிலையும்

[நடிகவேள் M. R. ராதா கருத்துரைகள்)

2. நவீன லீலா (நாடகம்)

சீர்திருத்த நாடகசபா கோவை.

நீங்கள் அவசியம் படிக்கவேண்டியது. பல அறிஞர்களாலும், பத்திரிகைகளாலும் மிகச் சிறந்த நூல் என்று பாராட்டப்பட்டது.

கார்ல் மார்க்ஸ்

(ஆசிரியர் : எஸ். சதாசிவம்)

கிடைக்குமிடம் :

இன்ப வாழ்வுப் பதிப்பகம்,

ஆர். எஸ். புரம் P. O.

கோயமுத்தூர்.

திராவிடப் பெரும்போர்

1. புகுந்தது போராட்டம்.

" குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா !
கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே ! "

" போர், போர், போர், அறப்போர் " இன்றைய திராவிடத்தின், மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலிக்கப் படும் குரலிது. ஆம்! எங்கு நோக்கினும் இன்று பேசப்படுவது போரைப்பற்றியே! இன்றே தொடங்காதா போராட்டம்-அடங்காத ஆரியத்தின் சூழ்ச்சி-வடவரின் வம்பு-பனியாக்களின்—பரிகாசம்-போக்க இன்றே தொடங்காத போராட்டம்; தினவெடுத்த எங்கள் தோள்பலம் காட்டப்போராட்டம் காண்ப தெப்போ! எப்போ! என்று ஏங்கித் துடிக்கிறது சிம்மத் தமிழன் செங்குட்டுவன் வழித்தோன்றிய செம்மல்களின் உள்ளம்.

" செங்குருதி பாய்ச்சியேனும் எம்மருமை திராவிடத்தை விடுப்போம் " வீணர்கள் ஆள விடுத்திரோம் இனி ஒரு கணமும், கண்மூடிகள் எங்கள் திறமையைக்காணட்டும்—அவசியமானல் இனி அவர்களைக்களத்திலே காண்கின்ருேம், என்று கருத்துரைகளைக் கனல் கக்கப்பேசி உளம் துடிக்கின்றனர் ஆயிரமாயிரம் வீர இளைஞர்கள், போர் முகம் காண.

இந்த நிலையிலே, திராவிடர் பெரும் போரைப் பற்றி ஒன்றும் உணராததுபோல பாசாங்கு செய்து "பாரதமாதாக்கி ஜே!" போட்டு பனியாக்களுக்கு வால்பிடித்து வருவதன்னியில், தான் பிறந்தநாட்டை தருக்கர்களின்வேட்டைக்காடாக்கிவிட்டு வேடிக்கை பார்க்கும் வீணர்குழாம், இன்னும் எத்தனை நாட்ளுக்கு இந்த துரோகம்செய்து வரப்போகிறது.

அன்புக்குரிய அருமை காங்கிரஸ் திராவிடத் தோழனே, உண்மையிலேயே நீ இன்னும் திராவிடர்கள் நிலையை உணராதிருப்பின், இனியாவது உணர்ந்து திருந்து—இல்லாவிடில் அழிந்தே போவாய் நிச்சயம் இனியாவது உனதருமை திராவிட நாட்டைப் பார்!" காவிரியும்-பெண்ணையும் வைகையும்—பொருணையும், வற்றாத நீரோடு பாய செந்நெல்லும் தீங் கரும்பும் விளையும் கழனிகள் இருமருங்கும் நிறைய—தேமா பலாசோலைகள் செழிக்க—பொன்னும் மணியும் முத்தும் நிறைந்த நாட்டைப்பார்"! சாலைகளும், சோலைகளும், காடுகளும், கழனிகளும் குன்றங்களும் நிறைந்த உனது வளநாட்டைப்பார்! ஏன் இந்த நாட்டிலே பஞ்சம்?

நெற்றி வியர்வை நிலத்திலே வீழ, ஆந்திச் சூரியன் அனல் நீக்கி மறையும்வரை உழைத்தும் உன தருமை திராவிட மகன் ஒட்டிய வயிறுடன் ஊருக்கு ஊர் சட்டிபானைகள் சகிதம், பாலுக்கேங்கும் பச்சிளங்குழந்தையை ஒரு பையிலே போட்டு கையிலே பிடித்துக்கொண்டு—"நடக்க முடியவில்லையே நான் என்ன செய்வேன்" என்று நடுச்சந்தியிலே வீழ்ந்து கிடக்கும் தனதருமை மனைவியின்முகத்தைப்பார்த்து கண்ணீர் வடிக்கும்" கோரக்காட்சிகள் மிகுந்திருப்பதையும் பார்!

உனது நாட்டிலே ஆளப்பிறந்த இனத்திலே பிறந்தவன் கூலிகளாக மலேயாவுக்கும், பர்மாவுக்கும் தென் ஆப்ரிக்காவுக்கும், சிலோனுக்கும் போய் சீரழிந்து சின்னு பின்னப்பட்டு திரும்பிவந்து திண்டாடுவதையும் பார்!

காலமெல்லாம் உழைக்கின்றேன் கட்டத்துணியில்லே, உட்கார வீடில்லே, மரத்துக்கு மரம் ஒண்டுகின்றேன். பாழும் மழை வந்தால் என் செய்வேன் பரமனே பார்த்தருள் புரியமாட்டாயா? என்று பண் பாடிடும் பாமரர்கள் நிறைந்திருப்பதையும் பார்!

எனது பாட்டனின் காலமுதல் பாடுபட்டு வருகின்றேனே இந்தப் பண்ணேயில், என் பையனுவது படிக்கக்கூடாதா? பார்வளம் பெற்றவரே சற்று பார்த்தருள் புரியும், கூலியைக் கூட்டித்தாரும் வயிறும் காய்கிறது, என்று கூறினல் "ஆட்சி எங்கள் கையில் இருக்கிறது இதோ !ஏவிவிட்டேன் அடக்குமுறையை அழிந்துபோங்கள் நாய்களே!" என்று கூறிடும் நல்லவர்கள் (?) மலிந்திருப்பதையும் பார்!

சிங்களம் வென்ற தமிழன் மரபு இன்று சேரிகளிலே கட்டக் கந்தையும் கால் வயிற்றுக் கஞ்சியும் அற்று கதறுவதையும் பார்!

வீழ்ந்துபட்ட இனத்தின் எழுச்சி முரசு கேட்டு புல்லேந்திகளின் கூட்டம் போர்ப்பரணி பாடி வாளேந்தி வீழ்த்துவோம் வண்டமிழன் மரபினே,என ஆர்ப்பரிப்பதையும் பார்!

மானமுள்ள திராவிடா! இன்னுமா உன் இரத்தம் கொதிக்கவில்லே? உன்நாடும், மக்களும் இவ்வளவு கேவல நிலேயில் இருக்க காரணம் என்ன? அவர்களனேவரும் சோம்பேறிகளா? அல்லது இந்த நாட்டிலே

தான் எதுவும் கிடைக்கவில்லையா? இது என்ன பாலைவனமா?

இந்த நேரத்திலே ஆடுவோமே பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று, என்று கூட்டங்கள் போட்டு கோலாகலங்கள் செய்கின்றாயே இது முறையா?

மொழிப்போர் தொடுக்க முன் வந்திருக்கும் மூதறிஞர்கள் வீட்டை காலிகளைவிட்டு தாக்கி கண்டபடி பேசுகின்றாயே இது முறையா?

இன்று வந்திருக்கும் சுதந்திரம் உனக்கும் உனது நாட்டு மக்களுக்கும் சாதித்திருப்பது என்ன? தியாகங்கள் பல செய்தோம் என்றுகூறி இன்று போகமனுபவிப்பவர்களில் சிலர் மந்திரிப்பதவிகளிலே அமர்ந்து மனதுக்குகந்த மாளிகைகளிலே வாசம்செய்து மாலை நேரத்திலே மந்த மாருதத்திலே தவழ்ந்து கொண்டிருப்பதை தவிர்த்து நாட்டுக்காக நாட்டு மக்களின் மானத்தைக்காப்பதற்காக, இழந்து போன மதிப்பை மீட்டும் பெறுவதற்காக, ஏதேனும் செய்ததுண்டா? டாடா, பிர்லா, பஜாஜ் படையெடுப்பைத் தவிர்த்ததுண்டா? சாதிப்பிரிவுகளை ஒழித்ததுண்டா? மதமாச்சரியங்களை மடித்ததுண்டா? வர்ணாச்சிரம முறையை ஒழித்ததுண்டா? தொழிலாளர் துயர் போக்கியதுண்டா? பாட்டாளிகளின் இன்னல் தவிர்த்ததுண்டா? பாமரர்களுக்கு கல்வி புகுத்தியதுண்டா? துணிப்பஞ்சத்தை போக்கியதுண்டா? அரிசி அவதியை நிவர்த்தித்ததுண்டா? அறிவாளிகளுக்கு உயர்வளித்ததுண்டா? லஞ்சப்பேயை ஒழித்ததுண்டா? கள்ளமார்க்கட்டைக் கலைத்ததுண்டா? இல்லையே! இதற்கு நேர்விரோதமாகவன்றோ காரியங்கள் நடைபெறுகின்றது.

மக்களை மடையர்களாக்க (ஹிந்து) மதப்பிரச்சாரம் ஒரு பக்கத்திலே பல லக்ஷ ரூபாய் சிலவிலே! கன்னித் தமிழை ஒழிக்க இந்திப் பிரச்சார சபைக்கு நன்கொடை! தமிழையும், தமிழர் தம் கலாச்சாரத்தையும் என்றும் (ஆரியர்க்கும்) வடவர்க்கு அடிமையாக்க கட்டாய ஹிந்தி திட்டம். காஷ்மீர் போராட்டத்தைக் கவனிக்க கடுமையான ஏற்பாட்டுக்குப் பல கோடி ரூபாய்கள்! ஆரம்ப பள்ளிகளே பல இல்லாதிருக்க ஆர்ட்ஸ் காலேஜ்கள் பல திறக்க அனுமதிகள்! சைவப் பிரச்சாரகர்களுக்கு சம்பளம், ஹிந்தி பண்டிதர்களுக்கு வெகுமானங்கள்! தந்தி கம்பி தண்டவாளம் வெட்டியவர்களுக்கு மான்யங்கள், அறிவு புகட்டும் விடுதலைக்கு "கொண்டுவா 2000 ரூபாய் ஜாமீன் உத்திரவுகள்" அறிஞர்களுக்கு அடக்குமுறை பகுத்தறிவு வாதிகளை ஒழிக்க பாதுகாப்பு சட்டங்கள்! ராவண காவியத்திற்கு சீட்டு! ராதா நாடகத்திற்கு (போர்வாள்)தடை! பணக்காரர்களுக்கு வக்காலத்து! இவைகளுக்கு உத்திரவு வாங்க வடநாட்டுக்கு காவடி கட்டும் ஹனுமானுக்கு (?) மூன்று லக்ஷம் தண்டம் (ஷ ஹனுமார் தற்சமயம் உடல் நலம் சரியில்லாது பங்களூரில் சிகித்சையிலிருக்கிறார்) அடடா என்ன அற்புதமான ஆட்சி.

மக்களாட்சி, மக்களாட்சி என்று பேசும் மானமுள்ள திராவிடா! இப்பொழுதாவது உனது நிலை புலனாகிறதா? நன்றாக சிந்தித்துப்பார் இவ்வளவுக்கும் காரணம் என்ன? நமது (மதி) மந்திரிகளின் மீது எந்த குறையும் கிடையாது, பாவம் அவர்கள் ஆடும் பொம்மைகள் தானே! சூத்திரக்கயிறுதான் வடநாட்டிலே இருக்கிறதே! வடநாட்டார் ஆடு என்றால் ஆடவேண்டும் போடு என்றால் போடவேண்டும் ஓடு என்றால் ஓடவேண்டும் இது தானே இவர்கள் பார்க்கும் மந்திரிவேலை இதுக்குத்தானே ரூ. 1350

சம்பளம் அழகான பங்களா! புதிய கார் இன்னும் பலப்பல!

இந்த நிலையிலுள்ள ஒரு ஆட்சியை நமது சுதந்திர ஆட்சி மக்களாட்சி என்று கூறிக்கொண்டு இன்னும் எவ்வளவு நாட்களுக்கு வடவர்களுக்கும் ஆரியத்துக்கும் அடிமைகளாக வாழ்வது? இன்னும் எவ்வளவு நாட்களுக்கு நாம் கண்மூடிகளாக காலம் தள்ளுவது? பொருத்தது போதும் குகைவாழ் ஒரு புலியே உயர்குணமேவிய தமிழா! இதோ உனது பெரும்போர் துவங்கிவிட்டது புறப்படு வாழ்வு அல்லது வீழ்வு. இனி நாம் யார்க்கும் குடியல்லோம் இதோ போர்முனைக்கு புறப்பட்டு விட்டோம். காட்டிக்கொடுக்கும் கயவர் கூட்டம் இன்னும் எத்தனை நாட்களுக்கு நம்மை வடவர்களுக்கு விற்பனைசெய்யும் தரகர்களாகவே வாழப்போகிறார்களா? அல்லது திராவிடர் தம் பெரும் போரிலே பங்குகொண்டு திராவிடர்களின் மானத்துக்காக, வாழ்வுக்காக, இழிவு நீக்கத்திற்காக, போராடப்போகிறார்களா? அதையும் தான் பொருத்துப்பார்ப்போம்.

2. ஆண்ட இனம்.

அழிந்தது ஆரியத்தால்.

"தேன் சுரக்கப்பேசி இந்த தேசத்தை தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்"

இன்று நமது நாட்டின் நல்வாழ்வுக்காக இரத்தம் சிந்தவேண்டிய அவசியம் என்ன? என்று சித்தம் சோர்ந்து நினைவு கூர்கையில், ஆம் அன்று "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று வாழ்ந்த

நாட்டிலே ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு பிழைக்க வந்த ஆரியக்கூட்டம் செய்த சதியன்றோ இத்தனைக்கும் காரணம் என்று நெஞ்சம் ஏங்குகின்றது.

அன்றொரு நாள் "உறுதிபடைத்த நெஞ்சமும் போருக்கஞ்சா வீரமும், அண்டியவர்க்கருளும் ஆற்றலும் பெற்று மொழியும், கலையும்வளர்த்து-ஹாரப்பா மொகஞ்சதாரா நாகரீகத்திற்கு இருப்பிடமாகத் திகழ்ந்த வண்டமிழ் வளநாட்டின்மீது, பிழைப்புக்காக வந்த ஒரு கூட்டம், சூதையும் வாதையும்புகுத்தி பொய்யையும் பித்தலாட்டத்தையுமே கொண்ட பல கதைகளை கட்டிவிட்டு முப்பத்தி முக்கோடி தேவர்களையும் அவர்களுக்கு துணையாக பல ஆயிரம் குட்டித்தெய்வங்களையும் கற்பித்துவிட்டு கல்லையும், மண்ணையும் கடவுளாகக் காட்டி மக்களனைவரும் கண்ணை மூடிக்கொண்டு அவைகளை நம்புவதற்காக மோட்ச நரக பாவ புண்ணியங்களை சிருஷ்டித்து இல்லாத பொல்லாத பல சூது வாது தந்திரங்களைச் செய்து யாவரையும் ஏமாற்றியபிறகு கொஞ்சம் கொஞ்சமாக அரசர்களையும் தம் வலைக்குள் வீழும்படி செய்து இந்த நாட்டிலே கணக்கற்ற சாதி பிரிவுகளையும், பிராமண க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, பஞ்சமனென்ற வர்ண பேதங்களையும், ஏற்படுத்தி பிறவியிலேயே உயர்வு தாழ்வு கற்பித்துவிட்டார்கள்.

அக்காலத்திலேயெல்லாம்இவர்களதுஇத்தகைய கொடிய சூழ்ச்சிகளை எதிர்த்துப் போராடியவர்களையெல்லாம், அரக்கர்களென்றும் ராட்சதர்களென்றும் தூற்றியதோடு நில்லாது அவர்கள் மீது மக்களுக்கு பெரும் கோபத்தை யுண்டுபண்ணக்கூடிய பல கதைகளையும் கட்டிவிட்டனர்.

வேதங்களென்றும், ஆகமங்களென்றும், இதிகாச-புராண-உபநிஷத்துக்களென்றும் அவைகளில்

கடவுளால்(?) கூறியிருக்கிறபடியே தான் ஒவ்வொரு மானிடனும் (இந்த உலகத்தில் இருக்கும் வரையில்) தனது மறு பிறவியைப்பற்றியும் ஆண்டவனின் லீலா விநோதங்களைப்பற்றியும் அல்லும் பகலும்அந்த ணர்களாகிய தாங்கள் கூறுகின்றபடி பஜித்தும் தாங்கள் கோருகின்ற தான தருமங்களைத் தவறாது தங்கட்கு செய்தும் வருகின்றவர்கள் மட்டுமே அவன ருள் பெற்று மோட்ச சாம்ராஜ்யத்திலே என்றும் சாயுச்சியமாக வீற்றிருக்கலாமென்றும்,இதற்காகவே அந்தணர்களாகிய தாங்களனைவரும் ஆண்டவனால் அந்த லோகத்திலிருந்து இந்த லோகத்திற்கு அனுப் பப்பட்டு இருப்பதாகவும், கடவுளின் பிரதிநிதிகளாக தாங்கள் இங்கே இருந்து மக்கள் உய்வதற்காக பல யாகங்களையும், யக்யங்களையும், அபிஷேக ஆராதனை களையும் ஜெபதபங்களையும், செய்து முடிப்பதாகவும் இதை ஒவ்வொருவரும் நம்பி அதற்குரிய சகலவும் தங்கட்கு செய்துகொடுத்து, தாங்கள் கூறுகின்றபடி நடந்துவரவேண்டும் என்றும்,

மீறி யாராவது தங்களின் பகுத்தறிவைப்பயன் படுத்தி இவையெல்லாம் எதற்கு? ஏன்? என்றும் கடவுள்களும் அவர்களுக்கு பிரதிநிதிகளாக இந்தக் கொள்ளை கூட்டமும் தேவையா? என்றும் கேட் டால் அவர்களை கடவுள், நிந்தகர்கள் என்றும் நாஸ் திகம் பேசி நாத்தழும் பேறியவர்களென்றும் அவர் களனைவரும் மறுமையிலே நரகத்தில் கிடந்து உழல் வார்களென்றும், தவிரவும், இந்த புராண-இதிகாச மத-கடவுள் நிந்தகர்கள் கூறுவதைக் கூட யாரும் கேட்கக்கூடாதென்றும், மீறி யாராவது கேட்டால் அவர்களும் அந்தநரகத்திலே கிடந்து உழல்வார்களெ ன்றும் எழுதியும், பேசியும், நடித்தும், உபன்யாசங் கள் செய்தும் மக்களிடையே பரப்பிவிட்டார்கள்.

இத்தனை அக்கிரமமான ஆரிய புளுகுனி பிரசாரத்தினிடையில் அமோகமாகப் பரவியிருந்ததும், அன்பையும், சத்தியத்தையும், கொல்லாமையையுமே பிரதான நோக்கங்களாக்கொண்டு விளங்கியதுமான சமண—பௌத்த மதங்களையும் அதன் தலைவர்களையும் பல இன்னல்களுக்கு உள்ளாக்கி தங்களுக்கு அரசர்களிடம் இருந்த செல்வாக்கை பயன்படுத்திக் கொண்டு அவர்களை பல வழியிலும் ஒழிப்பதற்கு வேண்டிய மந்திர தந்திர ஜாலங்களை செய்தும், செய்ததுபோல் காட்டியும், கழுவிலேற்றியும் யானைக் காலிலே இடறியும் கொன்று குவித்து வந்ததோடு அத்தகைய சமண பௌத்த முனிவர்களால் ஏற்படுத்தப்பட்ட மடங்களையும், விகாரங்களையும், சிற்ப சித்ர கூடங்களையும் பிடுங்கிக்கொண்டதோடு அவர்களால் எழுதப்பட்ட பல பழம்பெரும் தமிழ் காவியங்களையும் திருத்தியும்—மறுத்தும்—உறைகள் எழுதுவது போல மாற்றியும்-மிகுந்தவைகளை கொளுத்தியும் விட்டனர் அந்த ஆரியப் புரட்டர்கள். ஆகவேதான் இற்றைக்கு இரண்டாயிரமாண்டுகட்குமுன் குறள் எழுதிய வள்ளுவரும் அவருக்குப் பிறகு படிப்படியாகத் தோன்றிய சித்தர்களும், தமிழ் மறவர்களும், ஆரியத்தையும் அவர்கள் செய்த அக்கிரமத்தையும் புராண இதிகாச புரட்டுகளைப்பற்றியும் பலப்பல எழுதியும் மக்களிடையே கூறியும் வந்து இருந்தும், இந்த கோட்லே கும்பலின் பித்தலாட்டத்தின் காரணமாகவும், சமயோசித புத்தியினாலும் ஒருவருக்கொருவர் ஏவிவிட்டு அழிக்கும் திறமையினாலும், அவர்களின் கொட்டங்கள் எவராலும் அடக்கமுடியாமல் இருந்ததோடு மக்களிடையே ஒன்றுக்கு பத்தாக பரவவும் ஆரம்பித்துவிட்டது,

ஆகவே அவர்கள் எவ்வெக்காலத்து எவ்வெவ்வித வேஷமிடவேண்டுமோ அத்தகைய வேஷமிட்டு ஆலயங்களிலும், அரசர்களின் அவைகளிலும், மக்க

ளின் மன்றங்களிலும் பெரும் பதவிகளைப் பெற்ற தோடும், மான்யங்களாகவும், சன்மானங்களாகவும், கடவுள் காணிக்கைகளாகவும், பக்திப் பரிசாகவும், பல மன்னர்களையும், செல்வ சீமான்களையும் ஏமாற்றி கொஞ்சம் கொஞ்சமாக இந்த வளநாட்டின் செல்வத்தையும், மக்களின் அறிவையும் சுரண்டி வாழ ஆரம்பித்தார்கள். இதற்கு நேர் விரோதமாக திராவிடப் பெருங்குடி மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் அறிவையும் செல்வத்தையும் இழந்து, பல்லாயிரக்கணக்கான ஜாதிகளாகப் பிரிந்து, இறுதியிலே தங்கள் இனம் இன்னதென்று கூறவும் சக்தியற்றவர்களாகவும், பார்ப்பனர்களின் பாதம் தாங்கி-அவர் அடிபணிந்து-அவர் சொல் கேட்டாலன்றி வாழவே முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டதோடு தங்களின் உயர் செம்மொழியான தமிழையும் மறந்துவிட்டார்கள்,

தங்களின் தீஞ்சுவைத் தென்மொழியிலே வடமொழி புகுந்து நாளடைவிலே அதை சீரழியச்செய்து இறுதியிலே அதை சிதைத்து கன்னடமாகவும், மலையாளமாகவும், துளுவமாகவும், தெலுங்காகவும் செய்த தோடு அவ்வம்மொழி பேசும் பகுதியாளர்களையும் மொழிவழியே கன்னடிய, மலையாள, துளுவ, தெலுங்கர்களாக ஆக்கிவிட்டதோடு தங்களின் பூர்வ நிலையுணர்ந்து தாங்களனைவரும் ஒரே நாட்டினர்தான் ஒரே மொழியினர்தான் என்பதை, அறிந்துகொள்ள முடியாதவாறும் செய்துவிட்டனர். இப்படி இருந்தும் நமது உயர் தனித் தமிழ்மொழி (பேசப்படும் நிலப்) பரப்பிலே குறைந்தாலும் சிறப்பிலே குறையாதவாறு அவ்வப்போது பல அறிஞர்களைத் தோற்றுவித்து, ஆரியத்தின் சூழ்ச்சியையும், தனது அழிந்த நிலையையும் அனைவருக்கும் அறிவித்து வந்தது.

தமிழிலிருந்து வடமொழிக் கலப்பினால் வேறுக்

கப்பட்ட இதர மொழிகளும், அதன் வழியினர்களும் ஆரியப் பித்தலாட்டத்தை ஓரளவு மறந்தவர்களாகவும் தங்களை ஏதோ ஒரு தனித்த மொழியின் வழியினர்களாகவும் எண்ணிக்கொண்டு இருந்தார்களே தவிர தங்களின் திராவிட இனப்பற்றை மட்டும் மறந்துவிட்டார்களில்லை.

எனவேதான் இன்றைய தினம் நம்மிடையே திராவிடப் பெரும் போரை தலைமை தாங்கி நடத்தும் பெரியார் ராமசாமி அவர்கள், சிதைந்துபோன தமிழ் இனத்தவர் அனைவரையும் திராவிடர் என்ற பெயரிலே ஒன்றுபடுத்த முடியும் என்று உணர்ந்தே அதற்குரிய வழிவகைகளைக் காண ஆரம்பித்தார். அது குறித்துப் பிறிதோரிடத்தில் விளக்குவோம்; நிற்க, தமிழ்நாட்டிலே மட்டும் அவ்வப்போது பல சில ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிகள் தோன்றித்தோன்றி மறைந்துகொண்டே வந்தது.

இந்த இனப்போரிலே பலர் தங்கள் இன்னுயிர்களை பலிபீடத்திலே அர்ப்பணித்தார்கள். ஆயினும் இது பாமர மக்கள் மனதிலே மட்டும் அவ்வளவாக உரைக்கவே இல்லை. அந்த அளவுக்கவர்களனைவரும் கண்மூடிக் கபோதிகளாகவும், ஆரியப் பித்தலாட்டக்காரர்கள் கூறுகின்றவைகளுக்கு மறுப்புக்கூற (முடிந்தும்) முடியாதவர்களாகவும், தங்கள் நேரத்தையும், வாழ்க்கையையும் அந்த லோக ஆராய்ச்சிகளிலேயே செலவிடக்கூடிய மதியீனர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். ஆரியப் பார்ப்பனர்களோ மன்னர்களையெல்லாம் தங்கள் சொல் கேட்கும்படியாகச் செய்துகொண்டும், கேட்காதவர்களை வீழ்த்துவதற்கு வேண்டிய வேலைகளை உடனுக்குடன் செய்துகொண்டும் எந்த ஆட்சி ஏற்பட்டாலும் அதைப் பெருமளவுக்குத் தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டும், தாங்களும் அதற்கேற்ப நடந்துகொண்டும் வந்தார்கள்.

இந்நிலையில் இந்திய உபகண்டத்தில் பல பேரரசுகளும் சிற்றரசுகளும் தோன்றித்தோன்றி மறையலாயின. அன்னியர் படையெடுப்புகள் பன்முறை நிகழ்ந்தது, எத்தனையோ முடிமன்னர்களும் அவர்களது சந்ததிகளும் சாய்ந்தது. ஆனால் இந்த ஆரியப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியோ அவர்களது இனமோ இத்தனை நிகழ்ச்சிகளுக்கிடையில் கொஞ்சமாவது அழியவோ அல்லது ஒழியவோ இல்லை. மாறாக இன்னும் நன்றாக வேர் ஊன்றி வளர ஆரம்பித்தது. இந்த நிலையிலே இந்நாட்டிலே சரித்திரத்திலேயே முதன்முதலில் திராவிட நாட்டை வடநாட்டுடன் சேர்த்த ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சி ஆரம்பித்தது.

3. ஆங்கிலர் ஆட்சியும் ஆரியர் சூழ்ச்சியும்.

"உலகாள உனது தாய்மிக, உயிர்வாதை யடைகிறாள்
உதவா தினி ஒரு தாமதம், உடனே விழி தமிழா"

இதர மன்னர்களைப்போலவே வெள்ளையர்களையும் முதன்முதலில் வரவேற்று உபசரித்து அவர்கள் இங்கே வசதியாக வாழ வழி செய்துகொடுத்ததும் இந்த ஆரியப் பித்தலாட்டக்காரர்களே. ஆங்கிலே

C. N. R. & SONS,
RADIO SALES & SERVICES,
5/286, AVANASI ROAD,
COIMBATORE.

யர்கள் இந்த உபகண்டத்திலே வியாபாரம்செய்து கொண்டிருந்த காலத்திலே, இங்குள்ள, பல மன்னர்களின் தராதரங்களையும் பகைமை உணர்ச்சிகளையும் அவர்களுக்கறிவித்து—இவர்களில் யாருக்கேனும் ஒருவருக்குதவி செய்வதுபோல் பாவனைகாட்டி முதலில் பணத்தையும் பிறகு நாட்டின் சில பகுதிகளையும் தந்திரமாகவும், மிரட்டியும், பறித்துக்கொள்ளலாமென்று அவர்களுக்கறிவித்து அம்மாதிரியே அவர்களுக்கு உடந்தையாக இருந்து இந்நாட்டு மன்னர்கள் பலரை கவிழ்த்துவிட்டு, தாங்களும் ஆங்கிலேய நாகரீகத்தையும், நடை உடை பாவனைகளையும் கைக்கொண்டு, பல வழிகளிலும் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இந்நாட்டில் ஏற்பட காரணகர்த்தர்களாகஇருந்தனர்.

இந்த நிலையிலே—ஆரியர்களும் அவர்தம் சூழ்ச்சிகளும் சாதிமத வெறிகளும் சண்டாளர்களும் அதிகமாக நிறைந்த வடநாடு முதலில் ஆங்கிலர் வசமாயிற்று. பிற்கு கொஞ்சம் கொஞ்சமாக ஆரியர்

உயரிய சோடா, கலர்

பானங்களுக்கு பெயர் பெற்றது

வின்சர் & CO.,

திருவாரூர்.

உரித்தாளர் :

R. சிங்கம்,

தெற்குவீதி, திருவாரூர்.

வகுத்துக்கொடுத்த திட்டப்படி திராவிடநாடும், சிறு சிறு பகுதிகளாக மைசூரும்-கர்நாடகமும், மதுரையும்-தஞ்சையும், மற்றும் சிற்சில பகுதிகளாகவும் பாதகர்கள் வசமாயிற்று.

பிறகு ஆண்டுகள் பல செல்லவே ஆரியம் நன்றாக உணர்ந்துகொண்டது. ஆங்கிலேயர் இங்கிருந்து அகலவே மாட்டார்களென்பதை, எனவே, இனிமேல் ஆங்கிலேயர் தம் கல்விமுறைகளையும் நாகரீகங்களையும் கற்றுக்கொண்டால் சுலபமாக மற்றவர்களை வீழ்த்திவிடலாமென்பதை உணர்ந்துகொண்டது.

வெள்ளையர்கள் ஆட்சியிலே இந்திய உபகண்டம் பூராவும் வந்துவிட்டபிறகு இந்நாட்டு மக்களுக்கு சட்டங்கள் வகுக்கத் தலைப்பட்டார்கள், அப்போது இந்த தேவ பிரதிநிதிகள் தாங்களே இங்குள்ள மனிதர்கள் அனைவருக்கும் பிரதிநிதிகளென்றும், தாங்கள் கூறுவதே தேவவாக்கென்றும், தங்கள் மொழியிலுள்ள புராண இதிகாசாதிகளில் குறிப்பிட்டுள்ள சட்ட திட்டங்களே இங்குள்ள மனிதர்களை இதுவரை ஆண்டுவந்ததாகவும்—இனியும் அவைகளே தொடர்ந்து இந்நாட்டு மக்களை ஆள அருள்புரிய வேண்டுமென்றும் இம்மாதிரி எத்தனையோ முடி

உயர்வுக்கும், திறமைக்கும்
உறுதியளிக்கும் தங்க நகைகளுக்கும்,
வைர ஆபரணங்களுக்கும்,
வெள்ளிப் பாத்திரங்களுக்கும்
பெயர்பெற்றது
S. T. K. சுப்பையா பத்தர் & Bros.,
விஜயபுரம் P. O. திருவாரூர் S. I. R.

மன்னர்கள் செய்துவந்திருப்பதாகவும் கூறவே, அவர்களும் அதற்கு சம்மதித்து சில திருத்தங்களுடன் மனு, பராசர், போன்றவர்களின் ஸ்மிருதிகளின் மொழிபெயர்ப்பையே "ஹிந்துலா" என்று சட்டமாக்கியதோடு இந்தக் கூத்தாடிக் கோழைகள் கூறியபடியே இங்குள்ள திராவிடர்களனைவரையும் "ஹிந்துக்கள்" என்று அழைக்கவும் ஒத்துக்கொண்டதோடு ஆயிரமாயிரம் சாதிப் பிரிவுகளையும் சட்டபூர்வமாக ஏற்படுத்திவிட்டார்கள்.

இத்துடன் பார்ப்பனர்களின் தேவ தன்மையையும் ஒத்துக்கொர்ண்டு, அவர்களுக்கிருந்துவந்த மான்யங்களையும் காப்பாற்றி-தனிப் பள்ளிகள்-தனி உணவிடம்-தனி உறைவிடம் முதலிய பல சலுகைகளையும் நடைமுறையில் இருக்கும்படி செய்துவிட்டார்கள்.

இவர்களும் அதற்கு கைம்மாருக ஆங்கிலம் கற்றுக்கொண்டு-பலதுறையிலும் ஆங்கில ஏகாதிபத்தியம் இந்நாட்டில் பரவுவதற்கும்-மக்கள் என்றென்றும் அதன் அடிமைகளாக இருப்பதற்கும் ஆன வழிவகைகளைச்செய்து; தங்கள் இனத்தை பெரும்பெரும் பதவிகளிலே ஜட்ஜ்களாகவும்-கலெக்டர்களாகவும் மந்திரி தந்திரிகளாகவும், வக்கீல்களாகவும் அமர்த்திவிட்டு இந்நாட்டில் (ஆங்கில) ஏகாதிபத்தியத்தின் தூண்களாக விளங்கினர்.

ஆங்கிலேயர்களும் இவர்களுக்கும் இவர்களது பாதந்தாங்கிகளுக்கும் பிரதியாக சர், ராவ்பகதூர், திவான்பகதூர், பட்டங்கள் வழங்கி இவர்களது கொட்டங்கள் கெடாதவாறு பராமரித்து வந்தனர்.

இக்காலத்தில் நாட்டில் தேசிய காங்கிரஸ் மகா சபை தோன்றி, வெள்ளையர்களை எதிர்த்துப் போரா

டியபோதெல்லாம் இந்தக் கயவர்கள் கூட்டம் அதை நசுக்குவதெப்படி என்று நாள்தோறும் ஆராய்ந்து நாடாள்வோரிடம் கூறி வந்ததோடு பல துறையிலும் அதை ஒழிக்கப் பாடுபட்டுவந்தார்கள்.

ஏனெனில் தேசீய காங்கிரஸ் மகாசபையின் லக்ஷ்யம் அதன் தலைவர்களில் மிகச் சிறந்த மகாத்மா காந்தியடிகளால் வகுக்கப்பட்ட காலத்தில் அவைகள் அனைத்தும் ஆரிய சூழ்ச்சிகளுக்கு எதிரிடையாக இருந்ததுதான்; மக்களனைவரும் சமம்—மதவெறி கூடாது-ஜாதிப் பிரிவுகளே நம்மைச் சந்தியிலே இழுத்துவிட்டது-பிறப்பிலே உயர்வு தாழ்வு கூடாது—அனைவருக்கும் ஒரே நீதி வழங்கப்படல் வேண்டும் என்பன போன்ற காங்கிரஸ் கொள்கைகளில் சில, ஆரியப் பார்ப்பனர்களின் எதிர்ப்பிற்கு முக்கிய சான்றுகளாகும் எனவே அவர்கள் முழுமூச்சுடன் இவைகளை ஒழிக்கப் பாடுபட்டதுடன், வெள்ளையர்களுக்கும் உறுதுணையாக இருந்துவந்தார்கள்.

ஆனால், இந்நாட்டு பாமர மக்களோவெனில் பல காலத்துக்குப் பிறகு திராவிடர் தம் பெரு நாகரீகக் கொள்கைகளில் ஒரு சில மீட்டும் தைரியமாக ஒலிக்கப்படுகிறதே என்ற ஆர்வம் அனைவரையும் காங்கிரஸ் பக்தர்களாக மாறும்படி செய்தது, இதனால் தான் நமது திராவிடத் தந்தை பெரியாரும் மற்றும் பலரும்-தங்கள் பிறப்பு தொட்டே ஆரியத்தையும் அவர் தம் அக்ரமத்தையும் எதிர்த்து வந்தும்-காங்கிரசினால் அவற்றைப் போக்கமுடியும் என்று நம்பியே ஆரம்பகாலத்தில் காங்கிரசில் சேர்ந்து கடுந் தொண்டாற்றினார்கள்.

ஆனால் இவர்கள் நினைவு ஒருபுறமிருக்க ஆரியத்தின் சூழ்ச்சி மறுபுறம் திறமையாக வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது,

அதாவது காங்கிரஸ் செல்வாக்கானது நாளுக்கு நாள் சிறப்புடன் வளருவதைப் பார்த்தவுடன், இனி மேல் இதை நாம் மட்டும் நேரடியாகத் தாக்கியோ அல்லது வெள்ளையர்களுடன் சேர்ந்து மட்டுமோ ஒழிக்கமுடியாது என்பதை உணர்ந்துகொண்டது. எனவே இனிமேல் காங்கிரஸ் மகாசபைக்குள்ளாக வே புகுந்துகொண்டு அதை ஒழிக்கவேண்டுமென்று அதாவது "எதிர்த்துநிற்காதே அடுத்து கெடு" என்ற தங்கள் மரபின் பழமொழிக்கொப்ப, அதற்குள்ளாக வே புகுந்துகொண்டு தங்கள் பாசிசக் கொள்கைகளை தொடர்ந்து கைக்கொள்ளலானார்கள்.

வடநாட்டிலே இவர்களது செல்வாக்கதிகமிருப் பதனாலும், காங்கிரஸ் கட்சியின் தலைமையும் வட நாட்டிலேயே இருப்பதனாலும் எடுத்ததெற்கெல்லாம் உத்திரவுகள் வடநாட்டிலிருந்தே வரவேண்டியிருப்ப தனாலும் இவர்களது இந்த ஏமாற்று வேலை உடனே பலித்துவிட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

எனவே இனியும் தென்னாட்டு திராவிடர்கள் தொடர்ந்து இந்தப் பாசிச கும்பல்களின் சூழ்ச்சியிலே சிக்குண்டு கிடக்கும் காங்கிரசிலே அங்கம் வகித்துக் கொண்டு நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ உண்மை யாகவே எந்த நல்ல காரியத்தையும் செய்யவே முடி யாது என்றுணர்ந்த பெரியாரும் மற்றும் பலரும் உடனே விலகி தனி இயக்கம் காண ஆரம்பித்தனர். சேர்மாதேவி குருகுலப் போராட்டம் இதற்கு முத லில் வழிகாட்டியது.

பெரியார் ராமசாமியும் மற்றும் பலரும் அப்படி செய்யாதிருப்பார்களாயின் கண்டிப்பாக இன்றைய தினம் திராவிடர்களிடம் இவ்வளவு பெரு விழிப் பையோ—திராவிடப் பெரும்போர் துவக்க இவ்வளவு

விரைவையோ-உணர்வையோ ஒரு சிறிதும் கண்டிருக்க முடியாது. அனைவரும் ஆரிய அடிமைகளாகவே இருந்திருப்போம்.

இதைப்போலவே வடநாட்டிலும் பலர் காங்கிரசை விட்டு வெளியேறி விட்டனர். அவர்களில் நம் மதிப்புக்குரிய மகாத்மாவும்-சுபாஷ்போசும் முக்கியமானவர்கள்.

இறுதியாக இரண்டாவது உலகப்போர் முடிவடைந்ததும் ஆங்கில ஆட்சியானது, தனது ஏகாதிபத்திய சூழ்நிலைக்கேற்பவும், உலக நாடுகளின் விழிப்புணர்ச்சிக்கேற்பவும் இந்நாட்டு ஆட்சியின் ஒரு பகுதியை (பாகிஸ்தான் நீங்கலாக) காங்கிரசிடம் அளித்து சுதந்திரம் கொடுத்து விட்டோமென்று கூறி வெளியேறி விட்டது.

அதனால் காங்கிரஸ் ஸ்தாபனத்திலே உண்மையும் சத்தியத்தையும் பின்பற்றியவர்களில் பலர் வெளியேறியதும்-பலரின் தொடர்பு அற்றதும் அது அனேகமாக முழுதும் ஆரியக் கும்பலின் வேட்டை காடாயிற்று. அத்துடன் இன்னும் அதனுள் இருக்கும் ஒன்றிரண்டுதிராவிடர்களையும் ஒழித்துக்கட்ட ஆரம்பித்துவிட்டது உதாரணமாக தென்நாட்டிலே காமராஜ்ராஜகோபாலாச்சாரி தகராறும் ஓமந்தூராரைக் கவிழ்க்க பார்ப்பனர்களின் சதியும்,-வடநாட்டிலே, சுபாஷ்-பட்டாபி போரும், காந்திஜி-காங்கிரஸ் மேலிடத்துப் பிணக்கும், பட்டேல்-ஜெயபிரகாஷ் பகைமையும் டாண்டன் காங்கிரஸ் போரும், கிருபளானி-தேசபக்தர்கள் தகராறும்யாவரும் அறிந்ததே இந்நிலையில்காந்தியடிகளுக்கு நாட்டிலே அதிக செல்வாக்கிருப்பதாலும் அவர் நேர்மையாகவும் சத்தியமாகவும் நடந்து வருவதாலும், அவர் கூறுவதை அனேகமாக மக்களனைவரும் கேட்பதாலும், இனியும் அவர் இருந்தால்

தங்களது கொட்டம் அடங்கிவிடும் என்று உணர்ந்த பார்ப்பனீயம் உடனே அவரைப் பதினேறேவது அவதார மாக கோட்சே அவதாரம் எடுத்து கொலைசெய்து விட்டது-தனது பரம்பரை வழக்கப்படியே காந்தியடி களின் கொலைக்குப்பிறகு ஒரு பெரும் விழிப்புணர்ச்சி வேகமாகப் பரவலாயிற்று.

அன்றே! ஆம் 1927ம் ஆண்டிலே காந்தியடிகளி டமே கூறினர். இந்த பித்தலாட்டக் கயவர்கள், மத வெறியின் காரணமாக என்றேனும் ஒருநாள் நம் போன்றவர்களை ஒழித்தே தீருவர்'' என்றும், உதார ணங்கள் சரித்திரத்திலே எவ்வளவோ உண்டென் றும் கூறினர். ஆனால் அன்று, காந்திஜி அதை ஒப் பவே இல்லை—இன்றே!!! மக்களின் மனதிலே ஓர் மா பெரும் புரட்சி ஆம் பெரியார்-பெரியாரே தான்: என்ற உன்மைஒவ்வொருவர் உள்ளத்திலும் படரலா யிற்று.

இனி ஒருக்கணமும் ஆரிய சூழ்ச்சியைப் பொருத் திரேம். இவ்வளவு காலமும் கண்மூடிகளாக வாழ் ந்தது போதும் எமதருமை பெரியீர்? திராவிடத்தின் வாழ்வு சிறக்கவந்த தந்தாய்! உமது வெண்தாடி அசைவுக்காக இதோ காத்திருக்கிறேம் பல லக்ஷக் கணக்கிலே என்று அணி வகுத்து நின்றனர் தூத் துக்குடியிலே! சென்னையிலே' ஏன் செல்லுமிடங் களிலே யெல்லாம்.

உயர்தர பன்னீர் & வாசனை திரவியங்களுக்கு

K. T. R. வாசனை திரவியசாலை,

விஜயபுரம் P. O. (தஞ்சை ஜில்லா)

4. பெரியார் பணியும் பிரிவினைப் பயனும்.

"இருந்திங்கே அநீதியிலை வாழவேண்டாம்
இறப்புலகில் இடையரு இன்பங்கொள்வோம்"

பல மார்க்ஸ்கள்- அனேக லெனின்கள்.-எத்தனையோ சன்யாட்- சென்கள்,-வாஷிங்டன்கள்,-சாதிக்க முடியாத காரியத்தை பெரியார் ராமசாமி தன்னந் தனியாக இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் சாதித்து விட்டார்.

புத்தர் போராடி சலித்து விட்டதை-வள்ளுவர் தம் வாழ்நாள் முழுவதும் வாதிட்டு முடியாததை-சித்தர்கள் பலர் சித்தம் சோர்ந்து போனதை-தாயுமானவரும்-ராமலிங்கரும் தம்மால் ஆகாதென விட்டு விட்டதை கடைசியாக காந்தியடிகள் முயன்றும் முடியாது இறந்துபட்டதைத்தான் பெரியார் ராமசாமி தன்னால் முடியும் என்று சாதித்துக் காட்டி விட்டார்.

கலையை இழந்து கண்மூடிகளாக வாழ்ந்த திராவிடர்களை,-நாட்டையும் மொழியையும் மறந்து நன்றிகெட்ட துரோகிகளுடன் கூடிக் குலவிக்கொண்டிருந்த திராவிடர்களை-தன்மானமிழந்து தஞ்சம் புகுந்தவர்களின் தாள் பணிந்து கிடப்பதேஇனி தம்வேலை' எனக் கொண்டிருந்தவர்களை தன் இனத்தையும்-பண்பையும் மறந்து பார்ப்பனர்களின் பாதந்தாங்கிகளாக வாழ்ந்தவர்களை-சாதி சமய சண்டைகளிலேயே மூழ்கிகிடந்த சமூகத்தாரை-திருத்தினார் பகுத்தறிவு வாதிகளாக! ஆக்கினார் சுயமரியாதை சுடரொளிகளாக!!

ஆம்! எங்கும் புரட்சி! இன்று திராவிடத்திலே நோக்குமிடமெல்லாம் பகுத்தறிவு வாதிகளின் போர் முழக்கம் கேட்கிறது. அடிமைப்பட்ட தமிழகம்–சிதைந்து சீரழிந்து போன தமிழ்நாடு–மலையாளம் கன்னட, ஆந்திரமாக உருமாறிப்போன உங்கள் நாடு–உங்கள் நாட்டு மக்களனைவரும் உணர்ந்து விட்டனர் தாம் அனைவரும் திராவிடர்களென்பதை–உணர்ந்து விட்டனர். தாம் வாழ்வது தனித்தியங்கும் தன்மை கொண்ட திராவிட நாட்டிலென்பதை; இனியொருக்காலும் சகிக்கமாட்டோம் இந்த அநீதியை; "வாழ்ந்தால் எமது சுதந்திர திராவிட நாட்டிலே திராவிட நாகரீகங்களோடு தூய திராவிட மொழி பேசி வாழ்வோம்–இன்றேல் வீழ்வோம்" இது இன்றை திராவிடர்களின் போர் முழக்கம்; இந்நிலை ஏற்பட்டது யாரால்? எப்படி?

அப்பப்பா! அதைநினைக்க நெஞ்சம் நடுங்குகிறது ஒரே ஒரு கிழவர் ஊன்றுகோலன்றி ஒருதுணையும் அறியாதவர்–சீமான்களின் சீற்றத்துக்குள்ளானவர்–மதவெறியர்களின் மடமைக்குப் பலியாகும் நேரத்தை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவர்–புரோகிதர்களின் போராட்டம்–தனவந்தர்களின் தடை–கயவர்களின் வஞ்சகம்–கண்மூடிகளின் ஆர்பாட்டம்–பாமரர்களின் பகை–சுரண்டிப்பிழைப்பவர்களின் சொன்மாறி–வரண்டிகளின் வசை–வம்பர்களின் துன்பம்–நண்பர்களின் நயவஞ்சகம்–இத்தனையையும் ஏககாலத்தில்எதிர்த்துப் போராடினார், இறுதியிலேவெற்றி, ஆம் எத்தனையோ புத்தர்களும், சித்தர்களும் சாதிக்கமுடியாத காரியத்தை சாதித்து விட்டார். இன்று அவரது கண் ஜாடைக்காக காத்துக்கிடக்கிறது லட்சக்கணக்கான திராவிடர்களின் பெரும் படை.

இந்த நேரத்திலே தமிழ் நாட்டில் சிலருக்கு ஒரு சந்தேகம் தமிழர்களை திராவிடர்களென்று கூறுவது

எப்படி பொருந்தும்? என்றும் குறுகிய தனித்தமிழ் எல்லையே தங்கள் குறிக்கோள் என்று கூறிடும் கூற்றினர்க்கு ஒரு விளக்கம்: தமிழர்தம் நாடு தழைத்திருந்த நிலை உங்கட்கு தெரியும். தண்டமிழ் மறவர் மூவர் எண்டிசையும் புகழோச்ச வண்டமிழ் நாட்டை ஆண்டு வான்புகழ் பெற்றதும் நீவிர் அறிவீர் அந்நாடு இன்று எங்கே? அங்கே பேசப்பட்ட மொழி எங்கே? கூனிக்குறுகி பனிரெண்டு மாவட்டங்களில் மட்டுமே பேசப்படுவதுதானு உனது பழந்தமிழ்? இந்த குறுகிய நிலப்பரப்பு மட்டுமேதானு உனது பைந்தமிழ்நாடு? ஒரு காலத்தில் "ஒரு மொழி பேசி ஒன்றென வாழ்ந்த நந்தமிழ் மரபு", ஆரிய சூழ்ச்சியால் அல்லலுற்று ஆந்திர-கேரள-கன்னட-துளுவமாகி, இன்று, நிலையிலும்-மொழியிலும் மட்டுமே ஓரளவு மாறியிருப்பதால் அவைகள் வேறு நாடுகளாக ஆகிவிடுமா? அதனுல் மட்டுமே அந்நாட்டவர்கள் நமது பகைவர்களாக ஆகிவிடமுடியுமா? நமது பழந்தமிழ் நாட்டின் பல பகுதிகளும், மொழியும் சிதைந்து மாறுபட்டபோதிலும், தாம் அனைவரும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களென்பதை அவர்கள் இன்னும் மறக்கவே இல்லையே!-ஏன் என்றுமே மறக்கமுடியாததொன்றல்லவா நம் இனப்பற்று.

எனவேதான் நமது தலைவர் பெரியார் நம் அனைவரையும் திராவிடர்களென்று அழைக்கிருர், மொழியிலே இன்று சிதைந்து தமிழராகவும்-கன்னட-மலையாள-ஆந்திர-துளுவர்களாகவும் இருந்தபோதிலும், வழியிலும்-இனத்திலும், கலையிலும்-பண்பாட்டிலும் நடையிலும்-உடையிலும் நாம் அனைவரும் திராவிடர்களென்பதை நம்மில் யாரும் நியாயமாக மறுக்கவோ மறக்கவோ அன்றி மறைக்கவோ இயலாது; ஆகவே இனியேனும் உண்மையை உணர்வீர்களாக!

வென்றிகெட்ட நாடோடிக்கும்பலினுல், ஒன்றுபட்

டிருந்த நமது சமுதாயம் வீழ்ந்துவிட்டது; இன்று ஒன்றுபடும் காலம் வந்துவிட்டது. அதற்குரிய போரும் தொடங்கி நடந்து வருகிறது. ஆகவே (இன்னும்) ஓரளவு அறியாமையில் மூழ்கிக் கிடப்பதனால் மட்டும் நமது அருமை ஆந்திர—கன்னட—கேரள சகோதரர்களை எழுச்சிபெற்ற நாம் காட்டிக்கொடுக்க வேண்டாம். அவர்கள் இன்று மொழிவழியே தனிநாடு கோரி பெற்றபோதிலும் விரைவில் நாம் அனைவரும் இனவழியே ஐக்ய திராவிட யூனியனை அமைக்கும் நாள் வெகுதூரத்திலில்லையென்பதை உணர்ந்தாவது ஒன்றுபட்டு போராடுவோம். நடக்கும் நமது பெரும்போர் நமது இனத்தின்பெயராலேயே நடக்கட்டும். சிதைந்த பகுதிகளிலிருந்து சிலர் வராவிட்டால் கவலையில்லை. எழுச்சியும், வீரமும் நிறைந்தவர்கள் மட்டுமே நடத்தினால் போதும் இந்தப் போரை, விடுதலை வரும்போது அது திராவிடர்கள் அனைவருக்கும் பயனுறுமாறே இப்போரை திராவிடர்களின் பொதுப் பெரும்போராக நடத்துகிறார் தந்தை பெரியார் ராமசாமி.

ஆகவேதான் திராவிடநாடு உடனே தனியாக பிரிந்து தனி அமைப்பின்கீழ் தனித்தியங்கவேண்டும் என்று கூறுகின்றோம். இது "பாரதமாவின் பாதத்தை வெட்டுகின்றார்கள் பாபிகள்" என்று கூறிடும் பண்பினர்களுக்கு சற்று பயத்தைக்கொடுக்கிறது; நாம் கூறுகின்றோம். இந்த திராவிடநாடு, என்றுமே வடநாட்டுடன் சேர்ந்திருந்ததே கிடையாதே,—ஆங்கிலர் ஆட்சிக்குமுன், உங்கள் மாதா எப்போது பிறந்தாள்? ஆங்கிலர் ஆட்சியிலா? அல்லது அதற்கு முன்பா? அப்படியானால் அவள் ஆங்கில ஆட்சிக்கு முன் நொண்டியாகவா இருந்தாள்? இதற்கு நாடறிந்த நண்பர்கள் விடையிறுத்தால் நலமாக இருக்கும்.

நிற்க தனித்தியங்கும் தன்மை பெற்று தன்னாக

கண்டு வாழ்ந்த திராவிடம், ஆரியர்தம் சூழ்ச்சியினால் சிதைந்து சிறுகச்சிறுக பறங்கியர் வசமாயிற்று என்று முன்பே கூறினோம். அதாவது இரண்டாவது உலக மாப்போரிலே ஹிட்லரிடம் ஐரோப்பா கண்டம் எப்படி சிறுகச்சிறுக போலந்து-ஹாலந்து-டென்மார்க்-செக்-கிரீஸ்-பின்லாந்து-பிரான்ஸ் என்று வீழ்ந்ததோ அதைப்போலவே முதலில் வங்காளத்தில் ஒரு பகுதியும் பின் மாராட்டிரமும்—அயோத்தியும்—ஆந்திரமும்—கர்நாடகமும் — மதுரையும் — தஞ்சையுமாக ஒவ்வொரு நாடாகவே இவ்விந்திய உபகண்டம் ஆங்கிலர் வசமாயிற்று. இதுவும் அனைவரும் அறிந்ததொன்று.

ஜெர்மானிய ஹிட்லரை எதிர்த்துப் போரிட, அடிமைப்பட்ட நாடுகள்—அடிமைப்பட இருந்த நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தன. பலமொழி கலாச்சார நாகரீகங்கள் கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளனைத்தும், அமெரிக்காவும் ஒன்றுபட்டன. போரிட்டு வெற்றியடைந்தன, பின் நடந்தது என்ன?

நானே முன்னின்று நடத்தினேன். ஆகவே ஹிட்லருக்கு பிறகு அனைத்திய நாடுகளையும் ஆளும் உரிமை எனக்கேயென்று ஆங்கிலேயர்களோ—அமெரிக்கர்களோ-ருஷியர்களே- கூறவில்லை, அவரவர்கள் நாட்டை அவரவர்களே ஆளுகின்றனர் இதுவும் அனைவரும் அறிந்ததொன்றே. இதனால் ஹிட்லர் காலத்தில் ஒன்றுபட்டிருந்த ஐரோப்பிய மாதா உடைந்து கருங்கடலிலோ, அல்லது மத்தியதரைக் கடலிலோ புகுந்துவிட்டாளென்றோ அல்லது கொண்டியாகவோ நொடியாகவோ போய்விட்டாளென்றோ எந்த கண்மூடியும் கூறவில்லை கூறக்கூடிய அளவுக்கு ஐரோப்பியர்கள் அவ்வளவு மடையர்களுமல்ல அதைப்போலவே பலவித நாகரீகங்களும், மொழியும் நடையுடை பாவனைகளும் கொண்டுள்ள திராவிடர்களும் மராட்டியர்களும்—வங்காளியும்—பஞ்சாபியும்

சிந்தியும்-குஜராத்தியும் ஒன்றுசேர்ந்து வெள்ளையர்களுடன் போராடினார்கள். வெற்றி பெற்றபின் அவரவர்கள் நாட்டை அவரவர்களன்றோ ஆளுதல் முறை; அதை விடுத்து; நாங்கள்தானே போரை தலைமை வகித்து நடத்தினோம், எங்களிடம்தானே ஆங்கிலேயர்கள் ஆட்சியை விடுத்துப்போயினர் ஆகவே நாங்களேதான் இந்த உபகண்ட முழுமையும் ஹிட்லரிச ஆட்சி புரிவோம், என்று வடவர்களும் அவர்களது பாதவருடிகளும் கூறுவது முறையா?

ஓரளவுக்கு முஸ்லீம்களின் கலாச்சாரமும் நாகரீகமும் நடையும் ஒத்துவரவில்லை என்று உணர்ந்து தானே அவர்கள் கோறியபடி நாட்டைப் பிரித்துக் கொடுத்தார்கள்.

அதைப்போலவே-ஏன்-அதைவிடப் பன்மடங்கு முரண்பட்ட திராவிட கலாச்சாரமும்-ஆரிய-வடநாட்டு பனியாக்களின் கலாச்சாரமும் எப்படிப் பொருந்தும்? என்றுமே பொருந்தியதில்லையே!

ஆகவேதான்! என்றும் தனித்தியங்கி, ஆங்கிலர் ஆட்சியிலும், ஆங்கிலர்-இந்தியர் போராட்டத்தில் மட்டுமே ஒன்றுபட்டிருந்த திராவிடம், ஆங்கில ஆட்சியும், ஆங்கில x இந்திய போராட்டமும் முடிந்தவுடன், தன் பழமைக்கொப்ப (வடநாட்டிலிருந்து பிரிந்து) தனியரசு காண விழைகிறது; இதைத்தானே இன்றைய திராவிடர்கள் கூறுகின்றார்கள்.

இதிலென்ன தவறு? பாசிச ஹிட்லர்தம் சீடர்களே! "பாரதமாதா புத்ரர்களே"! கூறுங்கள்? தவிரவும் திராவிடம் வடவர்கள் ஆட்சியிலே இருப்பதனால், ஆங்கிலர் ஆட்சியிலே சுரண்டப்பட்டதைவிட பல மடங்காக வரியிலும், வியாபாரத்திலும், நிதிகளாகவும், காணிக்கைகளாகவும், சுரண்டப்படுகிறதே! இந்நாட்டு மக்களைப்பற்றியோ, அவர்களின் இன்னல்

களைப்பற்றியோ வடவர்களுக்கு ஒரு சிறிதும் கவலை கிடையாதே! கவலைப்படக்கூடிய பண்பினர்களும் அவர்களல்லரே! எனவேதான் இன்றைய திராவிட மக்கள் தம் நாட்டு செல்வத்தையும் உழைப்பையும் தாமே பயன்படுத்தி வாழ வழிகோலுகின்றார்கள். மானமும், உண்மை உணர்வும், நேர்மையும்கொண்ட எந்த திராவிட மகனும் இதை மறுக்கவே மாட்டான்.

இந்த நிலைமையில், நாம் என்றென்றும் வடநாட்டவர்களின் ஆட்சிக்கும்—சூழ்ச்சிக்கும் அடிமைகளாகவே இருக்கவேண்டுமென்பதற்காகவும், நமது மொழியையும், நாகரீகத்தையும் நசுக்கி உலகில் என்றுமே நாம் தலையெடுக்காதவாறு செய்ய வேண்டுமென்பதற்காகவும், இன்று நாம் வடவர்களின் அடிமைகளாக இருக்கிறோமென்பதை உலகிற்கு காட்டவேண்டுமென்பதற்காகவுமே! இன்று திராவிடத்தின்மீது இந்தி கட்டாயமாக புகுத்தப்பட்டிருக்கிறது. வீரமுள்ள திராவிட மகனே! இன்னும் இத்தகைய அநீதிகளைச் சகித்துக்கொண்டு உயிர் வாழ்வதைவிட பொருது மடிவதே மேலல்லவா! உடனே புறப்படு போர்முனைக்கு.

5. இந்தி நுழைவும் இறுதிப் போரும்.

"பொருந்தட்டும் கொலைசெய்யும் யதேச்சை மன்னன்
அருந்தட்டும் பொதுமக்கள் ரத்தச்சேற்றை"

ஒரு நாட்டை மற்றொரு நாடு என்றும் அடிமையாக வைத்திருக்க வேண்டுமென்றால்—அந்நாட்டு மக்களின் பண்பையும், நாகரீகத்தையும் பாழ்படுத்த வேண்டுமென்றால், முதலில் அந்நாட்டு மொழியை

கொல்லவேண்டுமென்பது ஏகாதிபத்திய சாஸ்திரத்தின் விதிகளிலொன்று. இன்று அதையொப்பவே, வளமார் திராவிடத்தை வடநாட்டு பார்ப்பனீய-பனியாக்கள் அடிமைப்படுத்தி இருப்பதன் காரணமாக, இந்நாட்டு மொழியையும், கலாச்சாரத்தையும் கொன்று' என்றுமே இந்நாட்டையும், நாட்டு மக்களையும் வடவர்களின் அடிமைகளாக வைத்திருப்பதற்காகவே முதலில் திராவிட மொழிகளைக் கொல்ல இந்தி இந்நாட்டின்மீது கட்டாயமாகப் புகுத்தப்பட்டிருக்கிறது என்பதைத்தவிர இந்தியின் எந்தவித தகுதி கருதியும் இங்கே கட்டாயமாக்கப்பட்டிருக்கிறதென்பதோ அல்லது இந்தி பொது மொழி ஆகக்கூடிய வாய்ப்பையோ இலக்கண இலக்கியங்களையோ, விஞ்ஞான அறிவு நூல்களையோ கொண்டிருக்கிறதென்பதில்லை. தவிரவும் இந்தி என்ற ஒரே பெயருடைய பிரிவுபடாத, சிதையாத, ஒரு மொழி இந்திய உபகண்டத்தில் எங்கணுமே சுமார் இரண்டு கோடி மக்களுக்குமேலால் பேசப்படுவதில்லை என்பதும் அறிஞர்கள் அறிந்ததொன்று. இன்றுவரை அம்மொழியில் துளசிதாஸ் ராமாயணத்தைத் தவிர தொன்மை கொண்ட ஒரு காவியமோ நூலோ தோற்றியதுமில்லை; இனித் தோற்றக்கூடிய வன்மையும் அம்மொழிக்கில்லை.

இத்தகைய ஒரு மொழி, இன்பத் தமிழும் அதன் 'இளங்குமரி'களாம், தெலுங்கும், மலையாளமும், கன்னடமும் பேசப்படும் திராவிடத்தில் தேவையா? இந்த லம்பாடி மொழியைக்கொண்டு, நமது சிறுர்களின்—வருங்கால திராவிட வீரர்களின்—உள்ளத்தை அடிமையுலகுக்கு அழைத்துச் செல்லச் செய்யும சூழ்ச்சி முறையா? உயிரேபோயினும் உண்மையையும், மானத்தையும் பறிகொடாத திராவிட மகனே! நன்ருக யோசித்துப் பார்! உனது வளநாடு வாழ்ந்த நிலையை உனது மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்

திப்பார்! கேவல்ராம்களும், செல்லாராம்களும், லால் சந்துகளும், சுராஜ்மல்ஸ்களும் உனது நாட்டைச் சுரண்டுவதைப்பார்! உனது மக்கள் உன் நாட்டிலேயே மானமும் மரியாதையும் அற்று மடிவதைப்பார். இந்நிலையில் 'தேனேடும் திராவிடத்தை' தேசீயப்பேர் கூறிக்கொண்டு வடநாட்டு வணிகர்களின் வளமான கூலிக்காசைப்பட்டு வியாபாரம் செய்யும் 'பாரத மாதா பரிந்து பெற்ற' புதல்வர்களையும் பார்! பெரியார் ராமசாமியின் படம் ஒன்றிருந்தால் அதையும் பார்! அந்த விசாலமான முகத்திலிருக்கும் போர்த் தழும்புகளையும் புறக்கணித்துக்கொண்டு அவர் உள்ளக் கிடக்கை அந்தப் பொறிபறக்கும் கண்களிலிருந்து கிளம்பி உன் உள்ளத்திலே ஊடுருவும், அது உனக்குரைப்பது இதுவேதான்.

"அடிமைப்பட்ட திராவிடமே! என்னருமை மறவர்குல மாணிக்கங்களே! நீங்கள் ஆரியர் சூழ்ச்சியில் அவதிப்பட்டு, ஆங்கிலர் ஆட்சியிலே அல்லலுற்று வீழ்ச்சியுற்ற பிறகேனும் உங்கள் உள்ளம், உங்களுக்காக—உங்கள் நாட்டிற்காக போராடும் என எண்ணினேனே! உங்கள் இனத்தின் இழிவைப்போக்க—உங்கள் உரிமையைப் பாதுகாக்கப் பயன்படும் என்று நம்பினேனே! இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக இராப்பகலாக அதற்காகத்தானே உழைத்தேன். எத்தனையோ இன்னல்களை தன்னந்தனியாக எதிர்த்து நின்றேனே! என்னுடன் சேர்ந்த தோழர்களின் உயிரும், உடமையும், மனையும், மக்களும் மதவெறியர்களாலும், மடையர்களாலும், பறிபோனது கண்டு மனம் பதறுது பாடுபட்டு வந்தேனே! இவ்வளவும் செய்தும் இறுதியிலே இன்று வந்த சுதந்திரத்தினுல் வடநாட்டுக் கும்பலின் வப்பு தவிர வேறெதையும்காணுது வாடுகின்ற நேரத்திலே வந்து விட்டதே இந்தி. நம்மையெல்லாம் சந்தியில் வைப்பதற்குத்தானே நம் மக்களையெல்லாம் மந்திகள்

என்று அந்த மடையர்கள் கருதிக்கொண்டிருப்பத னுல்தானே இன்று இந்தி கட்டாயமாக புகுத்தப்பட் பட்டிருக்கிறது. திராவிட மகனே, இனியாவது உணர்ச்சி பெறமாட்டாயா-ஒன்றுபடமாட்டாயா? உனது வீரத்தை உலகுக்கு அறிவிக்கமாட்டாயா? உறுதிகொண்டவனே-ஊராண்டவனே-உயிர்போனு லும் மானத்தைவிடாதவனே, அடிமை வாழ்வை இன்றே அறுத்தெறிய புறப்படு போர்க்களம் நோக்கி இதோ திராவிடர்களின் இறுதி பெரும் போருக்கு படைகள் அணிவகுத்து புறப்பட்டுவிட்டது. நீ இனியும் தயங்காதே- பின் தங்காதே; ஒரு ரோமம் போனுலும் கவரிமான் வாழாது. உனக்கோ அத்தனை யும் போய்விட்டது. உயிர் ஒன்றுதான் பாக்கிஅதுவும் ஒட்டிய எலும்புக்கூட்டிலே காலனின் வருகைக்காக காத்துக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலேயா வது அந்த உயிர் உனது நாட்டிற்காக--உனது மொழி க்காக—உனது வாழ்வுக்காக—உனது இழிவு இறுதி யாக நீங்குவதற்காக சிலவிடப்படட்டும். புறப்படு! புறப்படு! போர்க்களம் நோக்கி! இதோ—இதோ வந்துவிட்டது திராவிடரின்பெரும்போர். ஆம் இனி தாமதிக்கவோ-தயங்கவோ வேண்டியதில்லை. பெரி யாரின் சங்கம் ஒலித்துவிட்டது". போர்துவங்கிவிட் டது. மானமுள்ள திராவிடவீரனே! வீராங்கனை களே! உங்கள் ரத்தம் கொதிக்கவில்லையா? பெரியார் தம் பேருரை கோட்டபின்பும் தயக்கமா! புறப் படுங்கள் வெற்றி நமதே.

இரண்டாயிர ஆண்டு ஆரிய சூழ்ச்சிகளை தூள் தூளாக்க புறப்படு. இரு நூற்ருண்டு வடநாட்டு பனியாக்களின் சுரண்டலை ஒழிக்கப் புறப்படு. உனது இழிவுபோக்க புறப்படு போர்முனைக்கு, இந்தப்போர் இறுதிப்போராக இக்கட்டும். சேரன் செங்குட்டுவன், கனகவிசயர்களை முறியடித்த போராக இருக்கட்டும், கரிகாலன் கடாரத்தைவென்ற போராகஇருக்கட்டும்

பர்மியநாட்டை தன்காலடியில் வீழ்த்திய பராந்த கனின் பெரும் போராக இருக்கட்டும்—வதாபியை கொளுத்தி வடவேந்தன் புலிகேசியைகொன்று வா கை சூடிய வீரன் நரசிம்மபல்லவன் தொடுத்த இறு திப்போராக இருக்கட்டும் இந்த திராவிடப்பெரும் போர்.

புறப்படு பச்சைரத்தம் பரிமாறியேனும் திரா விடர்தம் நாகரீகத்தையும், கலையையும் மீட்டு உலகு க்கு அறிவிக்கப் புறப்படு-ஆரியத்தின் சூழ்ச்சி-தேசீய கங்காணிகளின் கண்மூடித்தனம்-வடவரின் வம்பு அத்தனையும் உன் ரத்த வெள்ளத்திலே அமிழ்ந்து அழியட்டும். வாழட்டும் உனது வளமார் திராவிடம். வீழட்டும் வீணர்களின் சூழ்ச்சி—திக்கெட்டும் பரவட் டும் உனது தீந்தமிழ் மொழி.

ராமா ஸ்டோர்ஸ்,

சில்க் & ஜவுளி வியாபாரம்,

பெரியகடைவீதி, கோயமுத்தூர்.

(மில் லைசென்ஸ் ஹோல்டர்)

சகலவிதமான விலை உயர்ந்த சில்க்குகளும், பட்டு ஜவுளிகளும், சினிமா நாடகங்களுக்கேற்ற சகலவித ஜவுளி தினுசுகளும் கிடைக்கும்.

N. B : சினிமா & நாடக நடிகர்களால் நற்சாட்சி பெற்றகடை.

நவீன நாகரீகத்திற்கேற்ற
கைத்தறி & மில் ஜவுளிகள் சரசமான
விலைக்கு கிடைக்கும்.
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.
ராஜா ஸ்டோர்ஸ்,
8/12, அவனுசி ரோடு,
(டைமண்ட் டாக்கீஸுக்கு பக்கம்)
கோயமுத்தூர்.

நல்ல ஆபரணங்கள் பெருகுவது
கைதேர்ந்த வேலைப்பாட்டினால்
உயர்வுக்கும், திறமைக்கும் உறுதியளிக்கும்
தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள்,
கல் பதித்த உயரிய ஆபரணங்கள்
அனைத்துக்கும் எங்கள் விலாசம் பேரும்,
புகழுடனும் விளங்குகிறது.
(Pro: S. T. RADHA.)
ராதாகிருஷ்ண ஜுவல்லரி மார்ட்,
பெரியகடைவீதி, கோயமுத்தூர்.

தற்கால நாகரீகத்திற்கு ஏற்றுப்போல்
வித விதமானதும் அழகானதுமான
கண்ணைக்கவரும் பித்தளை
பாத்திரங்கள் மற்ற கடைகளைவிட
சகாயமான கிரையத்தில் கிடைக்கும்.
அன்பர்களும், தோழர்களும் நமது கடைக்கு
ஒரு தடவை விஜயம் செய்யுமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

C. N. ரங்கைய்ய நாயுடு & Sons

புது மார்க்கட்,
பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

C. S. சித்தப்ப கவுடர்,

கந்த விலாஸ் ஜவுளிக்கடை,
ரெங்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்.

அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்றகடை
பெங்களூர், பனாஸ், ஆரணி, காஞ்சீபுரம்,
கொள்ளேகாலம், உறையூர், பட்டு
ஜவுளிகளுக்கும், கைத்தறி மில் ஜவுளிகளுக்கும்
பெயர் பெற்றது.

கந்த விலாஸ்,
Prop C: . S. சித்தப்ப கவுடர்.

G. D. NAIDU,
U. M. S., COIMBATORE.

தீபாவளி வெளியீடு!

மரகதா பிக்சர்ஸின்

மகோன்னத தயாரிப்பு

T. S. துரைராஜ், T. S. பாலையா, காளி N. ரத்னம்,
K. K. பெருமாள், M. R. சுவாமிநாதன்,
குளத்துமணி, P. G. வெங்கடேசன்,
T. A. ஜெயலக்ஷ்மி, C. T. ராஜகாந்தம்,
P. R. மங்களம், P. S. ஞானம், M. S. கண்ணுபாய்,
N. S. நாராயணன் நடிக்கும்

பிழைக்கும் வழி

பின்னணி சங்கீதம்

D. K. பட்டம்மாள்

கதை, வசனம், பாட்டு

T. K. சுந்தர வாத்தியார்

டைரக்ஷன் மித்ரதாஸ்

ஸ்டுடியோ மாடர்ன் தியேட்டர்ஸ்

மரகதா பிக்சர்ஸ்

எக்ஸ்டன்ஷன், சேலம்.

எதிர்பாருங்கள் !

நடிகவேள் **M. R. ராதா** நடிக்கும்

திருவாரூர் கே. தங்கராஜு தீட்டிய

"ராஜாதேசிங்"

(சரிதம் தழுவிய நாடகம்)

சீர்திருத்த நாடக சபா, கோயமுத்தூர்.

கதிரேசன் அச்சகம், கோவை. 10-48